## இலங்கைப் பாராளுமன்றம்

## பதவி வெற்றிடங்கள்

---

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் வெற்றிடம் நிலவும் பின்வரும் பதவிக்கு நல்ல தேகாரோக்கியமும் சிறந்த நல்லொழுக்கமும் உடைய நுவரெலியா மாவட்டத்தில் நிரந்தரமாக வதியும் இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு அமைய தயாரித்த விண்ணப்பங்கள், கல்வித் தகைமை, தொழில் தகைமை, ஏனைய தகைமை மற்றும் அனுபவ சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம்** 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் **"பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே"** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பத்தை தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும் (இந்த அறிவித்தல் தொடர்பான விபரங்களை www.parliament.lk எனும் இணையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்).

*கவனிக்க வேண்டியது:* விண்ணப்பிக்கப்படும் பதவியை விண்ணப்பப் படிவத்திலுள்ள இடைவெளியில் குறிப்பிடுவது கட்டாயமாகும்.

**<u>மேற்பார்வையாளர்/ செலவுப்பட்டியல் எழுதுநர்</u>**

1. **சம்பள அளவுத்திட்டம்**
   2016.11.07 ஆம் திகதிய 06/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அட்டவணை I இற்கு இணங்க இந்தப் பதவிக்கு உரித்துடைய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் ரூ.32,330-3x380/10x445/4x660-40,560 ஆகும்.

2. **தொழில் பற்றிய விபரம்**
   செலவுப்பட்டியல்களைத் தயாரித்தல், வீடு பராமரிப்பு, தோட்ட அலங்காரம் மற்றும் உணவுபானங்கள் வழங்கல் ஆகிய கருமங்களுடன் தொடர்புடைய அலுவலகப் பணிகளை மேற்பார்வை செய்தல்.

3. **பணியாற்றும் நிலையம்** - நுவரெலியா சேனாதிபதி இல்லம்

4. **விண்ணப்பிக்கக்கூடிய நபர்கள்**
   இந்தப் பதவிக்கு நுவரெலியா மாவட்டத்தில் நிரந்தரமாக வசிக்கின்றவர்களிடமிருந்து மாத்திரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த கிராம உத்தியோகத்தர் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

5. **வயதெல்லை**
   விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் மற்றும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள விண்ணப்பதாரிகளுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது).

6. **கல்வித் தகைமைகள்**
   i) கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சையில் (பழைய பாடத் திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்/ கல்விப் பொதுத் தராதரப் உயர்தர பரீட்சையில் (புதிய பாடத் திட்டம்) வணிகப் பிரிவில் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி அடைந்திருத்தல்.

   மற்றும்

   ii) கல்விப் பொது (சாதாரண தராதரப்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சிங்களம்/தமிழ், கணிதம் மற்றும் ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

7. **தொழில் தகைமைகள்**
   i) இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவகத்தால் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஹோட்டல் பாடசாலையினால் நடத்தப்படும் ஐந்து மாதங்களுக்கு குறையாத வீடு பராமரிப்பு அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை அல்லது விடுதி மற்றும் bபார் சேவை தொடர்பான அடிப்படை மட்ட பாடநெறி ஒன்றை பின்பற்றி சான்றிதழை பெற்றிருத்தல்

   மற்றும்

   ii) வாழ்க்கைத்தொழில் பயிற்சி (VTA) அதிகார சபை/தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதாவது ஒரு நிறுவனம் வழங்கும் ஆறு மாதங்களுக்கு குறையாத கணணிப் பிரயோகம் பற்றிய சான்றிதழை பெற்றிருத்தல்.

8. **அனுபவம்:**
சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற ஒரு ஓய்வு இல்லத்தில் அல்லது ஹோட்டலில் மேற்பார்வை மட்டத்திலான பதவி ஒன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

***குறிப்பு:*** *அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிறுவனத்தில் செலவுப்பட்டியல் எழுதுநர் பதவியில் அல்லது அதற்கு சமனான ஒரு பதவியில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவத்தை பெற்றிருத்தல் மேலதிகத் தகைமையாக கருதப்படும்.*

9. **ஆட்சேர்ப்பு நடைமுறை:**
எழுத்துப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவற்றின் மூலம் ஆட்சேர்த்துக் கொள்ளப்படும்.

10. **சேவை நியதிகளும் நிபந்தனைகளும்:**
(அ) இந்தப் பதவி நிரந்தரமானது. இந்தப் பதவிக்கான ஓய்வூதிய சம்பளம் தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு விண்ணப்பதாரர்கள் உடன்படுதல் வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் முதலில் மூன்று (03) வருட தகுதிகாண் கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். ஏற்கெனவே அரசாங்க சேவையில் /மாகாண அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள எவரேனும் நபர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால் அந்த நபர் ஒரு வருட பதில் கடமை கால அடிப்படையில் நியமிக்கப்படுவார்.
(ஆ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதிக்கு ஏற்புடைய நிதி மற்றும் திணைக்கள ஒழுங்குவிதிகளுக்கு இயைந்தொழுகுதல் வேண்டும்.
(இ) தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர் அநாதைகள், விதவைகள் / தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு அவரது சம்பளத்திலிருந்து அரசாங்கம் தீர்மானிக்கும் விகிதாசாரத்தில் ஒரு பங்களிப்பு தொகையை செலுத்த வேண்டும்.
(ஈ) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் நியமிக்கப்படுவதற்கு முன்னர் அவர்கள் பற்றிய பாதுகாப்பு சான்றறிக்கைகள் பெற்றுக் கொள்ளப்படும்.

11. கீழே குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளை (மூலப்பிரதிகளல்ல) விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும் பட்சத்தில் அத்தகைய சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) பிறப்புச் சான்றிதழ்
(ஆ) கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
(இ) தொழில்சார் தகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்
(ஈ) அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்

மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளுக்கு மேலதிகமாக, கிராம உத்தியோகத்தர் வழங்கும் சான்றிதழின் மூலப்பிரதியும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

12. அரசாங்க / மாகாண அரசாங்க சேவையில்/அரசாங்கக் கூட்டுத்தாபனங்களில்/ நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை தத்தமது திணைக்கள/ நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

13. ஏதேனும் வழிகளில் செல்வாக்குகளை பிரயோகிப்பது இந்த பதவிக்கான தகைமையை இழக்கச் செய்யலாம்.

14. விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் தவறானதென்பது ஒருவரைத் தெரிவுசெய்ய முன்னர் கண்டறியப்படுமிடத்து, அவர் தகுதியற்றவரென குறிப்பிடப்படுவதற்கும், நியமிக்கப்பட்ட பின்னர் அவ்வாறு கண்டறியப்படுமிடத்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் காரணமாக அமையும்.

15. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்க பெறும் அல்லது மேற்குறித்த சான்றிதழ்களின் பிரதிகளின்றி அனுப்பப்படும் அல்லது திணைக்கள / நிறுவன தலைவர்களின் ஊடாக அனுப்பி வைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு பின்னர் திணைக்கள தலைவர் ஊடாக கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்களும் மற்றும் மாதிரிப்படிவத்திற்கு அமையத் தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

Sgd./ CHAMINDA KULARATNE
Acting Secretary General of Parliament
பதில் பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.

2023 ஒற்றோபர் 05ஆம் திகதி.